JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-3 Witness
for Prosecution

CC No. 114/2024 Crime No. Station

| Name | PW–3–ரஞ்சனிதேவி | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of November 2025 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் ஆப்பக்கூடலில் குடியிருந்து கொண்டு நெசவு தொழில் செய்து வருகிறேன். எனது கணவரின் அண்ணன் ஜெகதீசன் மற்றும் அவரது மனைவி கலாவதி ஆகியோர் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவார்கள். எதிரி எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் தான் குடியிருந்து வருகிறா. எனது கணவரின் அண்ணனும், அவரது மனைவியும் தங்களது பையனுக்கு வேலையில்லாதது தொடர்பாக எங்கள் வீட்டில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரி தான் அரசியல் கட்சியில் இருப்பதாகவும், அதனால் வேலைக்கு தயார் செய்து கொடுப்பதாகவும் அவர்களிடம் கூறினார். அதற்கு பணம் செலவாகும் என்றும் அவர் கூறினார். எனது அக்காவும், மாமாவும் யோசித்து விட்டு கூறுவதாக சொல்லிச் சென்று விட்டார்கள். எதிரி இந்து சமய அறநிலைத்துறையில் எனது மச்சாண்டாரின் மகனுக்கு வேலை வாங்கித் தருவதாக கூறினார். பிறகு ஆஜர் எதிரி என்னிடம் வந்து 2019 ஆம் வருடம் எனது அக்கா கலாவதி அவரது வங்கிக் கணக்கில் இருந்து எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூ.2,25,000/– அனுப்பி உள்ளதாக கூறினார். அதற்கு நான் எதிரியிடம் கட்டாயம் நீங்கள் வேலை வாங்கித் தந்து விட வேண்டும் என்றும் அப்படி இல்லை என்றால் பணத்தை திருப்பித் தந்து விட வேண்டும் என்றும் கூறினேன். அதற்கு எதிரி நான் கண்டிப்பாக வேலை வாங்கி தந்து விடுவேன் என்று உறுதி அளித்தார். பிறகு எதிரி நேரடியாக எனது அக்காவையும் மாமாவையும் தொடர்பு கொண்டு மீதி பணத்தை தந்துவிட்டால் உடனடியாக வேலை வந்துவிடும் என்று கூறினார். எதிரி ஒரு நாள் எனது வீட்டிற்கு வந்து இப்பொழுதே பணம் கொடுத்தால் நாளைக்கே வேலைக்கான ஆர்டர் வந்துவிடும் என்று கூறினார். என்னிடம் எதிரி ரூ.1,00,000/– பணம் பெற்று

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.04 19:02:17 +0530

இருந்தார். அதனை திருப்பிக் கொடுத்துவிட்டார். பின்னர் எனது அக்கா மீண்டும் அவரது வங்கி கணக்கில் இருந்து ரூ.2,50,000/- எதிரியின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்துள்ளதாக எதிரி என்னிடம் தெரிவித்தார். பிறகு எதிரி எனது மாமாவிடமிருந்து ஆர்டர் காப்பி அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறி ரூ.25,000/- ஐ பணமாக பெற்றுக்கொண்டதாக எதிரி பழனிச்சாமி என்னிடம் தெரிவித்தார். அப்போது கொரோனா வந்துவிட்டது. ஒரு நாள் எதிரியிடம் இந்து அறநிலைத்துறையில் வேலைக்கு ஆட்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டதற்கு இல்லை கண்டிப்பாக வேலை வந்து விடும் என்று மீண்டும் கூறினார். பிறகு 2023 ஆம் வருடம் ஒரு நாள் காலையில் நானும், எனது மச்சாண்டார் ஜெகதீசனும் எதிரியின் வீட்டிற்கு சென்று அவர்கள் கொடுத்த பணம் ரூ.5,00,000/- ஐ திருப்பித் தருமாறு கேட்டோம். அதற்கு எதிரி பணம் தர முடியாது என்றும் உங்களால் என்ன முடியுமோ செய்து கொள்ளுங்கள் என்றும் மிகவும் சத்தமாக எங்களிடம் பேசினார். மாமா பின்னர் ஆப்பக்கூடல் காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும், சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.11.04 19:02:24 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

CC No. 114/2024 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | PW-2-கலாவதி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 04th day of November 2025 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கொக்கராயன்பேட்டையில் குடியிருந்து கொண்டு, இல்லத்தரசியாக உள்ளேன். எனது கொழுந்தனாரின் வீடு ஆப்பக்கூடலில் உள்ளது. அங்கு நாங்கள் அடிக்கடி செல்வோம். அங்கு சென்று எனது பையனின் வேலை விஷயமாக பேசிக் கொண்டிருந்தபோது எனது கொழுந்தனார் வீட்டிற்கு பக்கத்தில் குடியிருக்கும் ஆஜர் எதிரி பழனிச்சாமி என்பவர் எங்களிடம் நான் வேலை தயார் செய்து கொடுப்பதாகவும், அதற்கு சற்று பணம் செலவாகும் என்றும் கூறினார். அவர் அரசியல் கட்சியில் உள்ளார். எதிரி எங்களிடம் எனது மகனுக்கு அறநிலைத்துறையில் வேலை வாங்கி தருவதாக கூறினார். அதற்காக எங்களிடம் ரூ.5,00,000/- பணம் கேட்டார். நாங்கள் தற்போது ரூ.5,00,000/- பணம் எங்களிடம் இல்லை என்றும் பணத்தை தயார் செய்து விட்டு வருகிறோம் என்றும் கூறி வந்து விட்டோம். இந்நிலையில் கடந்த 11.10 .019 ஆம் தேதியன்று முதல் தவணையாக கொக்கரையான்பேட்டையில் உள்ள இந்தியன் வங்கிக் கிளையின் எனது கணக்கிலிருந்து ஓரிச்சேரியில் உள்ள கரூர் வைசியா வங்கியின் எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூ.2,25,000/- அனுப்பினோம். மீண்டும் 30.11.2019 ஆம் தேதியன்று கொக்கரையான்பேட்டை இந்தியன் வங்கிக் கிளையின் எனது வங்கிக் கணக்கில் இருந்து ஓரிசேரியில் உள்ள கரூர் வைசியா வங்கியின் எதிரியின் வங்கி கணக்கிற்கு ரூ.2,50,000/- இரண்டாவது தவணையாக அனுப்பினோம். பிறகு ரூ.25,000/- ஐ பணமாக எனது கணவர் எதிரியிடம் கொடுத்தார். பணத்தைப் பெற்றுக் கொண்ட எதிரி சுமார் 2 வருட காலமாக வேலை வாங்கித் தருவதாக கூறி இழுத்துக் கொண்டே சென்றார். பின்னர் 2023 ஆம் வருடம் ஒரு நாள் எனது கணவர் ஆப்பக்கூடலில் உள்ள எதிரியின் வீட்டிற்கு சென்று பணத்தை

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.04 19:02:32 +0530

திருப்பித் தருமாறு கேட்டபோது எதிரி எனது கணவரை தகாத வார்த்தைகளால் திட்டி, பணத்தை திருப்பித் தர மறுத்து கொலை மிரட்டல் விடுத்தார். அதன் பிறகு எனது கணவர் ஆப்பக்கூடல் காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும், சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.04 19:02:38 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.